# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 11/2021 | **CNR No.** | : | TNKI13-000009-2021 |
| **Name** | : | குமரேசன் | **Father's Name** | : | செங்கோடன் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 26 | **Village** | : | காரப்பட்டு |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:20 AM | **End Time** | : | 12:00 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03.02.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எந்த பள்ளியில் படித்தேன் என்றால் காரப்பட்டு அரசு பள்ளியில் படித்தேன். நான் குடியிருக்கும் ஊர் எதுவென்றால் காரப்பட்டாகும், நிலம் எங்கு உள்ளது என்றால் காரப்பட்டியில் இருந்து ஜே. புதூர் வரை உள்ளது. காரப்பட்டிற்கும் ஜே. புதூருக்கும் எத்தனை கி.மீ இருக்கும் என்றால் சுமார் 1 கி.மீ இருக்கும். காரப்பட்டியில் இருந்து ஜே. புதூருக்கு எத்தனை வருடமாக நான் சென்று விவசாயம் செய்து வருகிறேன் என்றால் நான் எனது தாத்தா காலத்தில் இருந்து செய்து வருகிறேன். ஜே.புதூர் கிராமம் எனக்கு நல்ல பழக்கம் என்றால் சரிதான். ஜே.புதூரில் சுமார் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 15 வீடுகள் இருக்கும். ஜே.புதூரில் சுமார் 1000 வீடுகள் கொண்ட பெரிய கிராமம் என்றால் சரியல்ல. ஜே.புதூரில் இருந்து சுமார்

எத்தனை மாணவர்கள் காரப்பட்டு பள்ளிக்கு செல்கிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

(2) எனது அம்மா வழி தாத்தா பெயர் என்னவென்றால் கோவிந்தன் ஆகும். ஜே.புதூரில் இருந்து எனது தாத்தா வீடு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 100 அடி இருக்கும். எனது தாத்தா வீட்டில் எத்தனை பிள்ளைகள் உள்ளார்கள் அவர்கள் எங்கு படிக்கிறார்கள் என்றால் 3 பிள்ளைகள் இருக்கிறார்கள் அவர்கள் பாப்பனூரில் உள்ள ஆர். பீ.எஸ் மெட்டிக் குளேசன் பள்ளியில் படிக்கிறார்கள். அவர்களை அழைத்து செல்ல பள்ளி பேருந்து ஜே.புதூர் கிராமத்திற்கு வந்து செல்கிறதா என்றால் இல்லை. எவ்வாறு பள்ளிக்கு செல்கிறார்கள் என்றால் எங்களது இரு சக்கர வாகனத்தில் காரப்பட்டு பேருந்து நிறுத்தத்தில் விடுவோம், அங்கிருந்து பேருந்தில் செல்வார்கள். அவர்கள் வீட்டில் இருந்து எந்த வழியாக காரப்பட்டு வருவார்கள் என்றால் இரண்டு மூன்று வழிகள் உள்ளது. ஜே.புதூர் வழியாக காரப்பட்டிற்கு தார் சாலை வருகிறது என்றும் அதிலும் வரலாம் என்றால் சரிதான்.

(3) ஜே.புதூரில் இருந்து சுமார் 50–60 குழந்தைகள், பள்ளி பேருந்து ஆகியவை மேற்சொன்ன தார் சாலை வழியாக தான் காரப்பட்டிற்கு வருகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் ஜே.புதூரில் இருந்து காரப்பட்டிற்கு மூன்று வழிகள் இல்லை என்றும், தார் சாலை மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல. திருப்பத்தூர் – ஊத்தங்கரை தார் சாலையில் இருந்து கிழக்கு பக்கமாக செல்லும் தார் சாலையானது ஜே.புதூரை அடுத்து வன்னாம்பள்ளி ஏரி, சுடுகாடு, சின்னசாமி நகர் வரை செல்கிறது என்றால் சரிதான். சின்னசாமி நகரில் செல்லும்

வழியானது தனி நபர் வழி என்றும் அதில் பொதுமக்கள் யாரும் செல்வதில்லை என்றால் சரியல்ல. **சர்வே எண்.76/1டி** காரப்பட்டு – ஜே.புதூர் தார் சாலை அருகில் உள்ளது என்றால் சரிதான், அவர் வீட்டு அருகில் சண்முகம் வீடு, லலிதா வீடு, சர்தார் பாய் வீடு, வெங்கட்டராமன் செட்டியார் வீடு, தேவகி வீடு ஆகியவை உள்ளது என்றால் சரியல்ல, இரண்டு வீடுகள் தான் உள்ளது, தார்சாலையை ஒட்டினார் போல் சுமார் 3 வீடுகள் தான் உள்ளது மற்ற வீடுகள் உள்ளே நிலத்தில் தான் உள்ளது. மேற்சொன்ன தார்சாலையை பயன்படுத்தி தான் அருகில் உள்ள வீடுகளும் உள்ளே உள்ள வீடுகளுக்கு செல்ல முடியும் என்றால் சரியல்ல, நிலத்தின் வழியாக வழிகள் வைத்துள்ளார்கள்.

(4) ஜே.புதூர் கிராமத்தின் பழைய பெயர் என்னவென்றால் ஜங்காலகுடிசை ஆகும். காரப்பட்டியில் இருந்து ஜங்காலகுடிசைக்கு செல்ல 100 ஆண்டுகளுக்கு மேலாக மண் சாலை இருந்தது என்றால் 100 ஆண்டுகள் இல்லை எனக்கு தெரிந்து 20 வருடங்களாக இருந்தது அதற்கு முன்பு தெரியாது, ஆனால் எனது தாத்தா வாங்கிய போது சாலை அமைத்ததாக சொன்னார்கள். காரப்பட்டில் இருந்து ஜே. புதூர் கிராமத்திற்கு எந்த எந்த சர்வே எண் வழியாக வண்டி பாதைகள் செல்கிறது என்றால் **சர்வே எண்.76, சர்வே எண்.50, சர்வே எண்.51, சர்வே எண்.55, சர்வே எண்.70, சர்வே எண்.69 ஆகும். வன்னாம்பள்ளி அருகே சர்வே எண்.136, சர்வே எண்.132, சர்வே எண்.135, சர்வே எண்.52** வழியாக செல்கிறது என்றால் சரிதான். **சர்வே எண்.50** சொத்தை பூஸ்திதி பாதை என்று வருவாய் துறை ஆவணங்களில் வகை செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. **சர்வே எண்.51** தற்போது **சர்வே எண்.51/2ஏ 4,**

மற்றும் **சர்வே எண்.51/2 சி2** என உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது, ஆனால் உட்பிரிவு ஆகியுள்ள விவரம் தெரியும்.

(5) **சர்வே எண்.51** சொத்து அய்யணார் கோவிலுக்கு சொந்தமான நிலம் என்றால் எனக்கு சரியாக தெரியாது. பொன்னுசாமி குமார்கள் ராமலிங்கம், அறுமுகம் ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியும். அய்யணார் கோவில் அருகில் செல்லும் வண்டி பாதை வழியாக தான் ஜே.புதூர் மக்கள் செல்வார்கள் என்றால் சரிதான் அதன் வழியாக தான் நாங்களும் செல்வோம். எனது பெரியப்பா மற்றும் அப்பா ஆகியோர்களும் அந்த தார் சாலை வழியாக தான் செல்வார்கள் என்றால் சரிதான். ஜே.புதூர் கிராம மக்கள் அந்த வண்டி வழி பாதையை பயன்படுத்த கூடாது என்று மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அரூரில் **அசல் வழக்கு எண்**.529/1988 என ஆறுமுகம் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் மாவட்ட ஆட்சியர், தருமபுரி, ஊத்தங்கரை வட்டாட்சியர், சின்னதம்பி, நொண்டி என்ற பெருமாள் கவுண்டர், பாப்பாத்தி, செங்கோடன், கந்தசாமி கவுண்டர் ஆகியோர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது, எனது அப்பாவுக்கு தான் தெரியும். எனது அப்பாவிற்கு எழுத படிக்க தெரியும் என்றால் தெரியும் எனது அப்பா செங்கோடன் தான் அந்த வழக்கை நடத்தினார். அந்த வழக்கு முழுமையான விசாரணைக்கு பிறகு 30.04.1994 தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் நேரடியாக தெரியாது, எனது அப்பா சொல்லியுள்ளார். அந்த வழக்கில் வண்டி பாதை என வாதிகளுக்கு தெரிந்திருந்தும் பிரதிவாதிகளை அழைக்கழித்து உள்ளார்கள் என்று தலா ரூ.100 நஷ்ட ஈடு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றிய விவரங்கள் நேரடியாக தெரியாது, ஆனால் எனது

அப்பா சொல்லியுள்ளார். மேற்படி விவரங்கள் எனக்கு தெரிந்தும் பிரதிவாதிகளை தொந்தரவு செய்ய வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா செங்கோடன் 04.08.1988 தேதியில் **சர்வே எண். 70 ல் 1.50** ஏக்கர் நிலம் காரப்பட்டு கிராமத்தை சேர்ந்த தடலி கவுடண்டர் குமாரர் நொண்டி என்ற பெருமாள், செங்கோடன் மனைவி பாப்பாத்தி, கந்தசாமி குமாரர் சின்னதம்பி ஆகியோர்களுக்கு செக்குபந்திக்கு உட்பட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

(6) மேற்படி கிரைய பத்திரத்தில் திருப்பத்தூர் – ஊத்தங்கரை ரோட்டில் இருந்து மாமூலாக சென்று வரும் வண்டி வழி பாதையில் பாத்தியம் உள்ளது என்று எழுதி கொடுத்துள்ளார் என்றால் கிரைய பத்திரம் எழுதி கொடுத்தது தெரியும், பாதை பற்றி எனக்கு தெரியாது. எண்ணிடம் காட்டப்படும் நகல் மேற்படி கிரைய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். **(04.08.1988 தேதியிட்ட கிரைய பத்திரம் (ஆவணம் எண். 596/1988) – பதிவிறக்க பதிவு நகல் – பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தில் கிரைய சொத்திற்கு வழி பாத்தியம் எவ்வாறு காட்டியுள்ளார்கள் என்றால் செல்லப்ப கவுண்டர் வகையறா நிலத்தின் வழியாக **சர்வே எண்.76, 50, 51, 52, 55, 70, 54** ஆகிய நிலங்களின் வழியாக கிரைய நிலத்திற்கும் வண்டி வாகனங்கள், கால்நடைகள் போக வர வழி நடை பாத்தியம் உள்ளது என்றும் **சர்வே எண்.69, 136, 132, 135** வழியாக செல்லும் மாமூல் பாதை இந்த நிலத்தில் இருந்து வண்டி வாகனங்கள், கால்நடைகள் போக வர மாமூல் வழி பாத்தியம் உள்ளது என்றும் அதை யாரும் தடை செய்ய கூடாது என்றும்

எழுதப்பட்டுள்ளது மேலும் 1895/71 பாக பத்திரத்தின் சி ஷெட்டியூலாக பாத்தியப்பட்டுள்ளது என்று எழுதப்பட்டுள்ளது. கியை பத்திரத்தின் படி பாப்பாத்தி, நொண்டி என்ற பெருமாள் கவுண்டர் குமாரர்கள், கந்தசாமி குமாரர் சின்னதம்பி ஆகியோர்கள் வழி பாதையில் சென்று வர எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான், நான் யாரையும் தடை செய்யவில்லை.

(7) எனது அப்பாவிற்கும் எனது பெரியப்பாவிற்கும் பாக பத்திரம் வழியாக வந்த சொத்துக்களுக்கு அவர் அவர் தானம் மற்றும் கிரையம் செய்து கொள்ள உரிமை உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கும் சொத்தை ரத்து செய்ய கோரி நான் கேட்க முடியாது என்றால் சரியல்ல, தனிபட்ட சொத்தை கொடுக்க ஆட்சேபணை இல்லை, பொது சொத்தை கொடுக்க முடியாது.

(8) 29.01.2021 தேதியில் 1 முதல் 4 பிரதிவாதிகள் திருத்தல் பத்திரம் செய்து 08.01.2021 தேதியிட்ட நன்கொடை ஆவணத்தில் **சர்வே எண்.50/4 ஏ** ல் முழு பாத்தியத்தை அரை பாத்தியம் என திருத்தம் செய்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் வில்லங்க சான்றை பார்த்த போது தெரிய வந்தது. 08.01.2021 தேதியிட்ட நன்கொடை ஆவணத்தை படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். **வா.சா.ஆ.6** பத்திரம் படி அதில் கண்டுள்ள சொத்துக்கள் தார் சாலைக்காக கொடுக்கப்பட்டு அதில் தார் சாலை அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன தார் சாலையானது முறையான அளவீடுக்கு பிறகு தான் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தார் சாலையை தவிர ஜே.புதூர் மற்றும் வன்னாம்பள்ளி மக்களுக்கு காரப்பட்டை

சென்றடைய வழி இல்லை என்றால் சரியல்ல. ஆண்டாண்டு காலமாக மண் சாலையாக இருந்ததில் தற்போது தார் சாலை அமைத்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான், எனக்கு தெரிந்து 20 வருடமாக வண்டி வழி பாதையாக இருக்கிறது.

(9) நான் காவல் நிலையத்தில் 18.01.2021 தேதியில் கொடுத்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 முதல் 8 பிரதிவாதிகள் 10 பிரதிவாதியின் பெயரில் எழுதி கொடுத்த நன்கொடை ஆவணம் சட்டபடி செல்லகூடியது என்றும் அதை ரத்து செய்ய கோர முடியாது என்றால் சரியல்ல. வன்னாம்பள்ளி மற்றும் ஜே. புதூர் மக்கள் மற்றும் நாங்களும் அந்த பாதையை தான் பயன்படுத்தி வருகிறோம் என்றும் அதை தவிர வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல. ஊர் பொதுமக்கள் பயன்படுத்த கூடாது என்றும் வேண்டாத நபர்களின் தூண்டுதலின் பேரில் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(10) **சர்வே எண்.69** யாருக்கு பாத்தியம் என்றால் ஆதியில் எனது பாட்டிக்கு பாத்தியமாகும். எனது பாட்டி பெயர் என்னவென்றால் பழனியம்மாள் ஆகும். எனது பாட்டியும் எனது அப்பாவும் சேர்ந்து வன்னாம்பள்ளி கிராமத்தில் இருக்கும் பல நபர்களுக்கும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், எனது அப்பா சொல்லியுள்ளார் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. காரப்பட்டு – ஜே புதூர் மாரியம்மன் கோவில் வரை தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜே.புதூர் கிராமத்தில் இருந்து வன்னாம்பள்ளி ஏரி வரை செல்வது மண் சாலை என்றால் சரிதான். ஜே.புதூரில் இருந்து வன்னாம்பள்ளி ஏரி

வரை **சர்வே எண்.136, 132, 135** ஆகிய சொத்துக்கள் வழியாக மேற்படி வண்டி வழி பாதை செல்கிறது என்றும் ஊர் பொதுமக்கள் ஆடு, மாடுகள் கொண்டு சென்று வருகிறார்கள் என்றால் சரிதான்.

(11) **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai